செ.வெ.எண். 804 நாள் 21.09.2010

# தமிழ் நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் புதிய உறுப்பினர் பணியேற்பு

தமிழ் நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் புதிய உறுப்பினராக திரு. எஸ்.நாகல்சாமி அவர்கள் இன்று (21.09.2010) பிற்பகல் 1.00 மணியளவில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் முன்னிலையில் பணியேற்புப் பெற்றார். ஏற்கனவே உறுப்பினராக இருந்த திரு. ஆர். ராஜபாண்டி அவர்கள் பணி ஒய்வு பெற்றதால் அவ்விடத்திற்கு புதிய உறுப்பினராக திரு.எஸ்.நாகல்சாமி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னதாக தமிழ் நாடு மின்சார வாரியத்தின் உறுப்பினராக (கணக்கு) ஐந்து ஆண்டுகளும், தமிழ் நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களின் முதன்மைக் கணக்காய்வுத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் தமிழ் நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர் திரு. எஸ்.கபிலன், / திரு. பி.டபிள்யூ.சி.டேவிதார், இ.ஆ.ப., அரசு முதன்மைச் செயலாளர், எரிசக்தித்துறை, / திரு. சி.பி.சிங், இ.ஆ.ப., தலைவர் மற்றும் முதன்மைச் செயலாளர் தமிழ் நாடு மின்சார வாரியம் / திரு. கே.வேணுகோபால், உறுப்பினர் மின்சார ஒழுங்குமறை ஆணையம் மற்றும் திரு. முருகன், நிர்வாக இயக்குநர் மின் தொடர் அமைப்புக் கழகம், த.மி.வா. ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை-9